**கடவுளின் ஒரே மகனை இந்த உலகில் என்னால் காண முடியவில்லை என்றாலும் அவரது மகத்துவமிக்க திருவுடலையும் இரத்தத்தையும் பார்க்கிறேன்**

– புனித பிரான்சிஸ் அசிசியார்

இயேசு உயிருள்ள அப்பம், நாம் அவரது உயிருள்ள உடல். நமது பாவங்களுக்குப் பரிகாரமாக அவர் சிலுவையில் பலியானார் (மத்.26:26-28; லூக்கா 22:19-20), இறையரசில் நாம் நிலைவாழ்வு பெற. திருப்பலிக் கொண்டாடும் போது கிறிஸ்துவின் இந்த பலியை நாம் நினைவுகூருகிறோம் (1பேதுரு1:19), தூய ஆவியானவரின் வல்லமையால் நமது மீட்புக்காக தம்மையே அவர் தொடர்ந்து அளித்து வருகிறார். உண்மையிலேயே, அதே பலிதான், ஆனால் பலி அளிக்கும் விதத்தில்தான் வித்தியாசம்.

கல்வாரியில் அவரது பலி இரத்தமயமானது, இனி அவ்வாறு இல்லை, ஏனெனில் இப்போது கிறிஸ்து மாட்சிமை நிலையில் இருக்கிறார். அருள்பொழிவு செய்யப்பட்ட அவரது குருக்களின் வார்த்தையாலும் செயலாலும் நற்கருணை அருளடையாளமாக இருக்கிறது. திருநூலில் இயேசு கூறிய வார்த்தைகளையே, நற்கருணை மன்றாட்டின் போது குருக்கள் கூறுகின்றனர். அவரது நினைவாக இதனைச் செய்ய வேண்டும் என அவர் பணித்திருக்கிறார். அவர் மீண்டும் வரும்வரை சிலுவைப் பலியை நினைவுகூருகிறோம் (லூக்கா22:16-19; 1கொரி.11:23-26).

அவரது உடலை உண்டு, இரத்தத்தைப் பருகும் போது அவரோடு இணைகிறோம், மற்றவரோடும் இணைகிறோம். கிறிஸ்துவில் ஒன்றிணைந்து, உணவைப் பகிர்ந்து கொள்கிறோம். இந்த கருணை காரணமாகத்தான், 'திவ்விய நற்கருணை' அழைக்கப்படுகிறது. கிறிஸ்துவில் நாம் ஒரே உடலாகிறோம். நற்கருணை பலி, திரு அவையின் பலி, நமது பலி. நாம் 'பெற்றுக் கொள்வது போல் மாறுகிறோம்' (புனித அகுஸ்தினார்). நமது மீட்புக்கும் உலகின் மீட்புக்கும் தந்தையிடம் பரிந்து பேசும் கிறிஸ்துவோடு நாம் இணைந்து கொள்கிறோம். கிறிஸ்துவ வாழ்வே, தியாக வாழ்வு. கிறிஸ்துவின் திருவிருந்தில் பங்கு கொள்ளும் நாம், நம்மில் நாம் மரிக்கிறோம். கடவுளின் திருவுளத்திற்கேற்ப, நாம் மற்றவர்க்காக வாழ்கிறோம். ✝

**இன்றைய வாசகங்கள்:**

இச. 8, 2-3. 14-16.

திபா. 147, 12-15. 19-20.

1கொரி. 10, 16-17.

யோவான் 6, 51-58.

**வாரம் ஒரு வசனம்**

இயேசு உயிருள்ள அப்பம், நாம் அவரது உயிருள்ள உடல்

INTERNAL CIRCULATION ONLY

BUL 24/2020

*Published by:* Peninsular Malaysia Pastoral Team

api@archkl.org

14 ஜூன் 2020

# Newbec

NEW WAY OF BEING CHURCH

கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தம்

மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்

மாதாந்திர கருப்பொருள்:

**ஒரு வார்த்தை சொல்லும் நான் குணம் பெறுவேன்**



# பெற்றுக் கொள்வது போல் மாறுதல்

கடவுளிடமிருந்து நமக்குக் கிடைத்த பெரும் கொடை நற்கருணை. "நற்கருணை குறைவில்லா மனிதருக்குக் கிடைத்த பரிசு அல்ல, மாறாக குறைவுள்ளோருக்கு ஆற்றலைத் தரும் மருந்து, ஊட்டச்சத்து" எனத் திருத்தந்தை பிரான்சிஸ் நமக்கு நினைவுப்படுத்தியுள்ளார். கிறிஸ்துவின் மீது பார்வையைப் பதித்து, வாழ்க்கையில் போராடும் உங்களுக்கும் எனக்கும் கிடைத்த விலைமதிப்பற்ற கொடையே நற்கருணை. இது நமக்கு வலு ஊட்டும்.




**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. கென்னத் கோபால்


*2020 ஆம் ஆண்டின் கருப்பொருள்*

***மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்***

*2020 ஜுன் (ஆனி) மாதத்தின் கருப்பொருள்:*

***ஒரு வார்த்தை சொல்லும் நான் குணம் பெறுவேன்***

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:** **கிறிஸ்துவின் திருவுடல், திரு இரத்தப் பெருவிழா - ஞாயிறு** **13 – 14 ஜுன் 2020**
இ.ச 8 :2-3, 14-16 தி.பா: 147: 12-13, 14-15, 19-20 1 கொரி 10: 16-17 யோவான் 6: 51-58
**"எருசலேமே ஆண்டவரைப் போற்றுவாயாக" ! " தி.பா : 147**

நடமாட்டக் கட்டுப்பாட்டு நேரத்தில் (2020 மார்ச் 18 - 24 மே) வரை பெறப்பட்ட காணிக்கைகள்:

| **பங்கு காணிக்கை** | பங்கு காணிக்கை | தியான இல்லம் | பமமேகு உணவு வங்கி |
|---|---|---|---|
| மொத்த தொகை: | **RM 26,356.00** | **RM 13,138.00** | **RM 3125.00** |

*உங்களின் அனைத்து வகையான பங்களிப்புகளுக்கும் மிக்க நன்றி.*
*இறைவன் உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!*

**நன்கொடை / காணிக்கைகள்**

**கீழ்க்கண்டவற்றில் எதற்கு நன் கொடை அல்லது காணிக்கை செலுத்துகின்றீர்கள் என்று குறிப்பிடவும்:**

(1) பங்கின் நிதி (2) திருப்பலி கருத்துகள்
(3) ஆராதனை அறை சீரமைப்பு (4) பமமேப உணவு வங்கி

**உங்களுடைய தொகையை இணையத்தின்வழி பங்கின் வங்கிக் கணக்கில் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். விவரங்கள் :**

| | |
|---|---|
| 1.வங்கியின் பெயர்: | **Public Bank Berhad** |
| 2.வங்கிக் கணக்கில் உள்ள பெயர்:: | **Church of Visitation** |
| 3.வங்கிக் கணக்கு எண்: | **3121194612** |

**பணம் செலுத்தியபின் எதற்கு நீங்கள் பணம் செலுத்தினீர்கள் என்பதை குறிப்பிட மறவாதீர்கள்:**

**(i) தொகை (ii) என்ன காராணம்:**
**(1) பங்கின் நிதி காணிக்கை**
**(2) திருப்பலி கருத்துகள் (பெயர்) - ஆன்ம இளைப்பாற்றி, நன்றி, அல்லது தனிப்பட்ட கருத்துகள்**
**(3) ஆராதனை அறை சீரமைப்பு**
**(4) பங்கு மனித வள மேம்பாட்டின் உணவு வங்கி ( கூடுதல் தகவல்களுக்கு: ஜோன் டேவிட்சன் (017-615 8961) அல்லது பென்னதெத் (012- 2715840)**

**பங்கு அலுவலக குறிப்புகளுக்காக, நீங்கள் பணம் செலுத்திய ரசீதை பங்கின் மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.** serembanvisitation@gmail.com

**கூடியவிரைவில் ஆலய வழிபாடுகள் இயல்பு நிலைக்குத் திரும்பும் என்பதை அறியத்தருகின்றோம்**

**பங்கு அலுவலகம் திங்கள் - வெள்ளி கா 8.30 - மா 5.30 வரை, சனி காலை 8.30 - மதி 1.30 வரை, திறந்திருக்கும்**

பங்கின் மறு சுழற்சி திட்டம் அடுத்த அறிவிப்பு வரும்வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே தயவு செய்து உங்கள் மறு சுழற்சி பொருட்களைக் கொண்டுவந்து குருவானவரின் கார் நிறுத்துமிடத்தில் வைக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம்.

***மரித்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்***
1) அரோக்கியசாமி சூசை - இறப்பு: 7-6-2020
2) கொவிட் 19 நோயால் மரித்த அனைத்து ஆன்மாக்களுக்காகவும்

***முடிவில்லாத ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக!***

## இதயங்களின் ஒன்றிப்பு:

கிறிஸ்துவில் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே!, இன்று நாம் ஆண்டவரின் திரு உடல் திரு இரத்தப் பெருவிழாவைக் கொண்டாடும் இவ்வேளையில் ஆண்டவரோடு நாம் கொள்ளும் நட்புறவின் பந்தியில் ஒன்றிணைந்து அவரோடு ஆழமாக ஒன்றிக்க அழைக்கப்படுகின்றோம். இந்த வேளையில் அவரின் நற்கருணை விருந்தில் பங்கு கொள்ள இயலாமல் போனாலும், அவரோடு நாம் கொண்டுள்ள நட்புறவு எப்போதும் நிலைத்துள்ளது. ஆண்டவரை ஒவ்வொரு நாளும் நினைவுகூர்ந்து, அவரின் அன்பில் நாம் வளரும்போது நம் உள்ளங்கள் அவரில் ஒன்றிணைக்கப்பட்டு, ஆண்டவரிலும், நம்மில் உருமாற்றம் நடைபெறுகின்றது. இதுநாள்வரை நீங்கள் இவ்வாறு செய்யாமல் இருந்தால் இப்போதே ஆண்டவரின் நட்புறவில் ஒன்றிணையுங்கள். அவர் உங்களுக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றார். அவரில் இணைவோம்.

உங்கள் அனைவருக்கும் ஆண்டவரின் திரு உடல் திரு இரத்தப் பெருவிழாவின் வாழ்த்துகள்.

அருட்பணி: சேவி & கென்னத்

- கடந்த மூன்று மாதங்களாக நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையின் காரணமாக ஆலய வழிபாடுகள் நடைபெறாததால், ஆலயத்தின் நிதிவரவு பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆலயம் மற்றும் பங்கின் செலவுகளுக்கு இதுவரை கிடைக்கப்பெற்றுக்கொண்டிருக்கும் தொகை பற்றாக்குறையாக உள்ளது. இதனால், உங்களுடைய நிதியை சிறியதோ பெரியதோ அதை நாங்கள் மிகவும் மதிப்பு மிக்கதாகக் கருதி ஏற்றுக்கொள்கிறோம். இதுவரை தாராள உள்ளத்தோடு தந்தவர்களுக்கு எங்களுடைய மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக!. இறைவன் உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

"உன் செல்வத்தைக்கொண்டு அவரைப் போற்று; உன் விளைச்சல்கள் எல்லாவற்றின் முதற்பலனையும் ஆண்டவருக்குக் காணிக்கையாக்கு அப்பொழுது உன் களஞ்சியங்கள் நிறைந்திருக்கும்; குடங்களில் திராட்சை இரசம் வழிந்தோடும். நீதிமொழிகள்: 3: 9-10

- ***இணையத்தின்வழி திருப்பலிகளில் பங்குகொள்ள: www.Tv.ArchKL.org***

13-06-2020 (முதல் ஜுன் 19 வரை)

| | |
|---|---|
| சனிக்கிழமை: 13-06-2020: | மாலை 6.00 மணி (தேசிய மொழி) |
| ஞாயிற்றுக்கிழமை: 07- 06 -2020 | காலை 7.30 மணி ( தமிழ்) |
| | காலை 9.00 மணி ( மாண்டரின்) |
| | காலை 10.30 மணி(ஆங்கிலம்) |

வாரநாட்கள்: (திங்கள் - வெள்ளி) ஜுன் 15-19 வரைமாலை 6.00 மணி (ஆங்கிலம்